**கிறிஸ்துநாதர் ஆலய வாலிபர் சங்கத்தின் அறுபதாண்டு நிறைவு ஒக்டோபர் 10ம் திகதி 2013**

காலிமுக கிறிஸ்துநாதர் ஆலய தமிழ் வாலிபர் சங்கம் 1952ம் ஆண்டு கனம் ஜே.வி.யோர்க் என்ற குருவானவரினால் ஆரம்பிக்கப்பட்டது, சங்கமானது 1972ம் ஆண்டு தனது இருபதாவது ஆண்டை நிறைவு செய்தபோது பாரிய வளர்ச்சியை கண்டிருந்தது. சாமுவேல் ஆனந்தராஜின் 1968 அறிக்கையின்படி திரு எட்வர்ட் செல்லையா தலைவராகவும் திரு சாமுவேல் ஆனந்தராஜ் காரியதரிசியாகவும் கடமையாற்றினார்கள். இக்காலத்தில் வாலிபர்களின் எண்ணிக்கை நூற்றி மூன்று அதில் நாற்பது பேர்வரை கூட்டங்களில் தவறாமல் பங்குபற்றியுள்ளார்கள். ஒவ்வொரு வாரமும் வாலிபர்கள் ஆராதனை முடிந்தவுடன் ஒன்றுகூடி வாலிப கூட்டங்களை நடத்தியுள்ளனர். இலங்கையில் திருச்சபை அருட்பணி சங்கத்தின் (1818-1968) நூற்றைம்பதாவது ஆண்டை வாலிபர்களே ஒழுங்கு செய்து மூன்றுநாள் ஆன்மீக கூட்டங்களை நடத்தினார்கள். இந்த மூன்று நாளும் வாலிபர் சங்கத்தின் ஆரம்பகால உறுப்பினர் திரு எஸ் எஸ் தங்கையாவுடன், லூக் ஜோன், போல் ஆகியோர் பிரசங்கித்திருக்கிறார்கள். வாலிபர்கள் கொழும்பு மிருகக்காட்சி சாலைக்கு சென்று அங்கு கூடும் மக்களுக்கு வெளியரங்கக் கூட்டங்களை நடத்தி பிரசங்கித்திருக்கிறார்கள். இக்காலத்தில் வாலிபர்கள் சங்கமும் சுவிசேஷ சங்கமும் ஒன்றிணைந்து பணியாற்றினார்கள். வாலிப சங்க அங்கத்தவர்களே சுவிசேஷ சங்கத்திலும் பங்கெடுத்து ஜெப கூட்டங்கள் நடத்துவதிலும், வீடுகளை சந்திப்பதிலும் ஈடுபட்டார்கள். சில மாதங்களில் ஆறு ஜெபக்கூட்டங்களும் நடத்தப்பட்டதுண்டு என ஆரம்பகால அங்கத்தவரான திரு ஜோசப் செல்லையா தகவல் தருகிறார். இவர்களின் காலத்தில் வாலிபர்கள் ஆலய வளவில் ஒன்றுகூடி இரவில் "Camp Fire" நடத்தியுள்ளார்கள் அதே இரவு விழிப்பிரவு கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளது. எழுப்புதல் கூட்டங்கள், ஜெபக்கூட்டங்கள், உல்லாசப் பயணம், நாடகங்கள், இசை நிகழ்ச்சிகளை குறைவின்றி நடத்தியிருக்கிறார்கள். இலங்கை திருச்சபையால் குருத்தலாவை, வெலிமடை, டிக்கோயா பகுதிகளில் நடத்தப்பட்ட வாலிபர் கூட்டங்களில் வாலிபர்கள் பங்கெடுத்தார்கள். இந்நேரத்தில் அக்காலத்தில் வாலிபர் சங்கத்தில் செயலாற்றிய ஒரு சிலரை நினைவுகூறுவது தகுதியானது இவர்கள் பெயர்கள் பின்வருமாறு, திரு. பி. ரட்ணராஜ், திரு. எட்வர்ட் செல்லையா, திரு. குமார் துரைராஜ், திரு. ஆனந்தராஜ், திரு. இம்மானுவேல், இன்று போதகராக இருக்கும் அருட்திரு தர்மராஜ், திரு. தேவசகாயம், திரு. பிரான்சிஸ், திரு. சுந்தரராஜ், திரு. வயலட் இராஜேந்திரம், திரு. இம்மானுவேல், திரு. சுபாஸ், திரு. பொபி அசராயா, திரு. மனோ, திரு. ஜோசப் செல்லையா, திரு. விக்டர் டானியேல், திரு. ஹென்றி, திரு. பிச்சைமுத்து, திரு. ஜீவா ஸ்டெனிஸ்லஸ், திரு. செல்வநாதன், திரு. பேர்ட்டி, திரு. ஜோயல் சத்தியநாதன், அருட்திரு ஜோசப் வேதமுத்து, அருட்திரு தர்மராஜ், திரு. எபநேசன் செல்லையா, திரு. ஜோதிராஜ், திரு. சந்திரா பாலன் மற்றும் பெண்கள் பகுதியில் திருமதி எஸ்.பாலன், திருமதி கலா, திருமதி வயலட் வேதமுத்து, திருமதி சரோஜினி ஜெபநேசன், திருமதி மேசி டானியேல் ஆகியோர். இவர்களில் நீண்டநாள் உறுப்பினரான அருட்திரு தர்மராஜ் அவர்கள் 1969இல் உபதேசியாராக இணைந்து 1995இல் போதகராக நியமனம் பெற்றார். 1972ம் வருடம் திரு. ஆனந்தராஜ் தலைவராக இருந்தபோது நடைபெற்ற இலங்கை திருச்சபை வாலிபர் இயக்கம் நடத்திய கிரிக்கெட் போட்டியில் திரு. ஆனந்தராஜ் தலைமையில் ஆங்கில சபையும் தமிழ் சபையும் இணைந்து விளையாடியது. இதுவே சபை பங்கெடுத்த முதலாவது கிரிக்கட் போட்டி என்பதும் குறிப்பிடத்தக்கது.

வாலிபர் சங்கம் தொடர்ச்சியாக வளர்ந்து 1982இல் திரு. ஆர் பொன்னம்பலத்தின் தலைமையில் குருவானவர் கனம் பெனட் பாலசிங்கத்தின் வழிநடத்தலில் தனது முப்பதாவது ஆண்டு விழாவை கொண்டாடியது. இக் காலப்பகுதியில் சங்க உறுப்பினர் திரு. ஜோசுவா ஜேசுதாசன் இலங்கை திருச்சபை வாலிபர் இயக்கத்தின் உப செயற்குழுவின் தலைவராகவும், தேசிய கிறிஸ்தவ பேரவையின் செயலாளராகவும், திரு.எஸ்.சைமன் தமிழ் பிரிவின் உப செயலாளராகவும் நியமனம் பெற்ற அதே வேளை இன்று எமது சபை குருவானவராக இருக்கும்

அருட்திரு ஜெயராஜ் செல்லையா தமிழ் பிரிவின் தலைவராக நியமனம் பெற்றார். இன்று வாலிபர் சங்கத்தினர் பாவிக்கும் பெனரை 1986இல் திரு திருமதி செல்லப்பா அவர்கள் நன்கொடையாக வழங்கினார்கள் இக்காலத்தில் திரு ராஜா ஏபல் தலைமை வகித்தார். ஒவ்வொரு மாதமும் நான்காவது வாரம் நடைபெறும் ஆராதனை இன்று வாலிபர்கள் உற்சாகமாக பங்குகொள்கின்றனர். இந்த ஆராதனை 1986இல் அருட்திரு சார்ள்ஸ் அவர்கள் காலத்தில் திரு ராஜா ஏபல் தலைவராக இருந்தபோது அறிமுகம் செய்யப்பட்டது. 1987இல் கொட்ரிஜ் சாமுவேல் தலைவராக இருந்தபோது "வாலிபர் அரங்கு" என்ற மாதாந்த செய்தித்தாளை வெளியிட்டார். 1987இல் நடைபெற்ற இலங்கை திருச்சபை விளையாட்டுப்போட்டியில் வாலிபர்கள் சாம்பியன் பட்டம் பெற்றனர்.

1991 – 2012 வரை கிறிஸ்டி வொட்சன், அன்று செல்வராஜ், போல் போல்ராஜ், ராஜ்குமார் சுபாஷ், டினேஷ் டேவிட், அசோக் செல்வராஜ், அசோக் சுபாஷ், அல்வின் ஜோன், டென்வர் பாலன், சதீஷ் குமார், சஞ்சீவ் பாலன், ஆகியோர் தலைமைத்துவம் வழங்கினார்கள். 1994இல் திரு கிறிஸ்டி வொட்சன் தலைமை வகித்தபோது ''விதை ஒன்று விருட்சமாகிறது'' என்ற தலைப்பில் மூன்று நாள் முகாம் ஒன்று நடத்தப்பட்டதோடு, 5 சபைகள் சேர்ந்து "கல்வாரியின் குரல்" என்ற பெயரில் ஈஸ்டர் நிகழ்ச்சி இசை நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றது. 1994ல் நடைபெற்ற அகில இலங்கை வேதாகமப் புதிர் போட்டியில் திருமதி புளோரா அன்சலம், அசோக் செல்வராஜ், ஆதவன் செல்வரட்னம், சுவேந்தினி கோயில்பிள்ளை ஆகியோர் பங்குபற்றிய குழு முதலிடத்தைப் பெற்றது. 1997ம் ஆண்டு வாலிபர் சங்கத்தின் உறுப்பினராக இருந்த எமது இன்றைய பேதகர் அருட்திரு. ஜெயராஜ் செல்லையா குருபட்டம் பெற்றார். இலங்கை திருச்சபை வாலிபர்கள் வருடாவருடம் நடத்தும் கிரிக்கட் போட்டியில் பங்குபற்றி பல பரிசில்களை பெற்றுள்ளனர். 1998இல் திரு கிறிஸ்டி வொட்சன் அகில இலங்கை திருச்சபை வாலிபர் இயக்கத்தின் உப குழு தலைவராகவும், அன்சலம் பிலிப் கமிட்டி அங்கத்தவராகவும் தெரிவானார்கள். 2001இல் திரு. போல் போல்ராஜ் தலைமை வகித்த காலத்தில் "சமாதான கானங்கள்" என்ற தொனியில் இசை நிகழ்ச்சி நடைபெற்றது. வாலிபர்கள் ஒவ்வொரு வருடமும் கிறிஸ்மஸ் காலங்களில் வீடுகளுக்கு சென்று கரோல் கீதங்கள் பாடுவது வழக்கம் அதில் கிடைக்கும் பணம் வறிய மக்களின் சமூக சேவைக்கென்று செலவழிக்கப்படும். அதில் மட்டக்களப்பில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட ஒரு கிராமத்துக்கு உதவியும், வென்னப்புவை வயோதிபர் இல்லத்துக்கு உதவிகளும் செய்ததோடு சபையில் உள்ள வசதி குறைந்த ஒருவரின் வீட்டை கட்டுவதற்கும் உதவிகள் செய்யப்பட்டுள்ளது.

2002 காலப்பகுதியில் திரு அசோக் செல்வராஜ் தலைமை வகித்தபோது 50 ஆண்டு நிறைவுவிழா "துதி சமர்ப்பணம்" என்ற தலைப்புடன் கொண்டாடப்பட்டது. வாலிபர்கள் ஒவ்வொரு வருடமும் விழிப்பிரவு ஆராதனைகளை ஒழுங்கு செய்வது வழக்கம். 2011ம் ஆண்டு வாலிபர்கள் "DOXA" என்ற தொனியில் ஒரு இசை நிகழ்ச்சியை நடத்தினார்கள், இதன் கருப்பொருள் "கடவுளை மகிமைப்படுத்துவோம்" என்பதாகும். 2012இல் மூன்று நாட்கள் "இவர் யார்?" என்ற தலைப்பில் தலைமைத்துவ முகாம் ஒன்றை அத்துருகிரியவில் உள்ள ''மெத் அரண'' என்ற இடத்தில் நடத்தினார்கள். அறுபதாவது ஆண்டையொட்டி வாலிபர் சங்கங்களுக்கிடையிலான வேதாகம புதிர் போட்டி ஒன்று நடாத்தப்பட்டது. அதில் கொழும்பில் உள்ள அனேகமான சபைகளை சேர்ந்த வாலிபர்கள் பங்கெடுத்தனர். இம்மாதம் பத்தாம் திகதி சனிக்கிழமை ஐந்து மணிக்கு நடைபெறும் விசேட நன்றி செலுத்தும் ஆராதனையை எமது சபை குரவானவர் அருட்திரு ஜெயராஜ் செல்லையா அவர்கள் நடத்துவார்கள்.

தொகுப்பு: நெப்போலியன் பத்மநாதன்